# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8108586

C

1. District மாவட்டம் : DVAC
PS: காவல்நிலையம் DVAC, HQ Chennai
Year: ஆண்டு 2021
FIR No.: மு.த.அ. எண் 02
Date: நாள் 13.01.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7, 7A and 12
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 12.01.2021 — Date to நாள் வரை : 12.01.2021
Time Period : நேர அளவு
Time from நேரம் முதல் : 15.30 Hrs — Time to நேரம் வரை : 2100 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.01.2021 — Time நேரம் : 21.30 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.01.2021 — Time நேரம் : 1100 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — South, 9 kms.
Beat Number முறைக் காவல் எண் :
(b) Address : முகவரி Office of the Assistant Engineers (O&M), Madipakkam, Moovarasampettai, Puzhithivakkam 33/11 KV Sub Station, TANGEDCO, Chennai South Circle, Madipakkam, Chennai - 91.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C.K. Kumaran
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் Deputy Inspector Cell Officer
(g) Address : முகவரி District Inspection Cell, Collectorate, Chennai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. D. Moharasundaram, CD, Office of AE, Madipakkam, 2. D. Purushothaman, Foreman, Office of AE, Madipakkam, 3. M. Sampath, Inspector of Assessment, Office of AE, Moovarasampettai, 4. S. Gopi, Wireman, Office of AE, Moovarasampettai, 5. P. Chithan, Temporary SS operator, Office of AE, Madipakkam, 6. M. Moorthy, Foreman Special Grade, Office of AE, Moovarasampettai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு
(i) Rs. 1,21,400/-
(ii) Two Silver Tumbler.

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR content is enclosed in the Seperate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed A. Samina Banu Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the complainant

[signature] 13/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.01.2021, 1200 Hrs

Name: பெயர் A. Samina Banu
Rank: நிலை Inspector No. எண் police,
S/C, VB AC,
Chennai - 16.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.02/2021, சட்டப்பிரிவு 7, 7A மற்றும் 12 ஊ.த.(திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.

சென்னை-91, மடிப்பாக்கம், மடிப்பாக்கம் பேருந்து நிலையம், 33/11 KV துணை மின் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மின்பகிர்மான வட்டம்-I, உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் இயங்கி வரும் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக திரு.C.K குமரன், மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மாவட்டம் அவர்கள் 12.01.2021ம் தேதியிட்டு அளித்த புகார் மனு தொடர்பாக எனது உயரதிகாரியின் அனுமதி பெற்று இன்று 13.01.2021 தேதி காலை 10.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திரு.C.K குமரன் அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.C.K.குமரன்,<br>வட்டாட்சியர் / மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1. | காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-600016. |

அ1/15/2021 நாள்: 12.01.2021

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-91, மடிப்பாக்கம், மடிப்பாக்கம் பேருந்து நிலையம், 33/11 KV துணை மின் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மின்பகிர்மான வட்டம்-I, உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் ஆகிய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை நாள் 12.01.2021 மதியம் 3.30 மணி முதல் இரவு 9 மணிவரை - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

—

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 12.01.2021 மதியம் 3.30 மணி முதல் இரவு 9 மணிவரை சென்னை-91, மடிப்பாக்கம், மடிப்பாக்கம் பேருந்து நிலையம், 33/11 KV துணை மின் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மின்பகிர்மான வட்டம்-I, உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் ஆகிய அலுவலகத்தில் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின்போது லஞ்சப்பணம் என்ற சந்தேகிக்கப்படும் மொத்த பணம் ரூ.1,21,400/-, இரண்டு வெள்ளி டம்ளர்கள் மற்றும் நடவடிக்கையின் செயல்முறை ஆணை மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுத் தணிக்கை செயல் முறை ஆணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,
ஒப்பம் /- C.K.குமரன்,
மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை-1.

இணைப்பு- மேற்கண்டவாறு

Sir, Received this proceedings with letter at about 21.30 hours and after getting permission from the higher officers this day (13.01.2021) at 10.00 hours, I am registering a case in V&AC HQrs. Cr.No.02/2021 u/s 7, 7A and 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 for the purpose of taking up investigation. Sd/- (A.Samina Banu) Inspector of Police, V&AC, SIC-II, Chennai-16, 13.01.2021.

<u>இருதுறை கூட்டுத்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு:</u>

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் ஆய்வாளர்கள் இணைந்து இன்று (12.01.2021) சென்னை-91, மடிப்பாக்கம், மடிப்பாக்கம் பேருந்து நிலையம், 33/11 KV துணை மின் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மின்பகிர்மான வட்டம்-I, உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் ஆகிய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1.<br>2. திரு.என்.ரவிக்குமார்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>4. திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>5. திருமதி.அ.சமீனா பானு,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-91, மடிப்பாக்கம், மடிப்பாக்கம் பேருந்து நிலையம், 33/11 KV துணை மின் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மின்பகிர்மான வட்டம்-I, உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் ஆகிய அலுவலகங்களில் அரசு பணிகளை செய்வதற்கு ஊழியர்கள் லஞ்சம் பெறுவதாக நம்பகமான ரகசிய தகவல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வு பிரிவிற்கு கிடைத்தது. இந்த தகவல் சென்னை மாவட்ட ஆய்வுக் குழுவிடம் பகிரப்பட்டது. மேற்படி தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்து அனுமதி பெற்று, பின் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப் பிரிவு-2 அலுவலர்களும் இணைந்து இன்று (12.01.2021) இருதுறை திடீர் கூட்டாய்வு மதியம் சுமார் 3.30 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2. உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் ஆகிய அலுவலகங்கள், மடிப்பாக்கம் கிழக்கு மேற்காக செல்லும் பெரியார் நகர் மெயின் ரோட்டில் தெற்கு நோக்கி மேற்படி அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி உதவிப் பொறியாளர் அலுவலகத்தின் தரைத் தளத்தில் 33/11 KV SS துணை மின் நிலையம் மற்றும் மடிப்பாக்கம் மற்றும் மூவரசம்பேட்டை ஆகிய பகுதிகளுக்கான மின் கட்டணம் தொடர்பான பில்லிங் மற்றும் கலெக்ஷன் பிரிவு காணப்பட்டது. அந்த பிரிவில் இரண்டு கவுண்டர்கள் காணப்பட்டது. மேலும் முதல் தளத்தில் மேற்படி அலுவலகம் நுழைவாயில் தெற்கு நோக்கி உள்ளது.

3. முதல் தளத்தில் நுகர்வோர் அமர்வதற்கான இருக்கைகளுடன் கூடிய அறையும், வடக்கு பக்கத்தில் தெற்கு நோக்கி புழுதிவாக்கம் பகுதிக்கான மின் கட்டண பில்லிங் மற்றும் கலெக்ஷன் பிரிவு காணப்பட்டது. உதவிப் பொறியாளர், மடிப்பாக்கம் அலுவலகத்தின் அலுவலக அறையில் உள்ளே நுழைந்ததும் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரிடம் தணிக்கை குழு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் மோகனசுந்தரம் என்றும் இவ்வலுவலகததில் வணிக ஆய்வாளராக கடந்த 2 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து மடித்து வைக்கப்பட்ட நிலையில் பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.14,000/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரங்கள் ரூ.2000 x 5; ரூ.500 x 8 ஆகும். இந்த பணம் குறித்து திரு.D.மோகனசுந்தரம் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.14,000/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

4. மேலும் அவர் கையில் ரெக்சின் பழுப்பு நிற கைப்பை ஒன்றை வைத்திருந்தார். அந்த கைப்பை குறித்து திரு.D.மோகனசுந்தரம் அவர்களிடம் கேட்டபோது தனது கைப்பை என்றும் தனது அலுவலக பயன்பாட்டிற்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த கைப்பையில் உள்ள ஒரு அறையை சோதனை செய்தபோது அதில் மடித்து கசங்கிய நிலையிலும் ரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட நிலையிலும் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்ததில் ரூ.45,010/- இருந்தது. அதன் விவரங்கள் முறையே ரூ.2000 x 11; ரூ.500 x 36; ரூ.200x7; ரூ.100x27; ரூ.50x5; ரூ.20x8; ரூ.10x50 ஆகும். இந்த பணம் குறித்து திரு.D.மோகனசுந்தரம் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம்

ரூ.45,010/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வணிக ஆய்வாளரிடம் உதவிப் பொறியாளர் மடிப்பாக்கம் குறித்து கேட்டபோது அவர் உதவிப் பொறியாளர் மடிப்பாக்கம் திரு.சந்திரன் என்பவர் பணிபுரிந்து வருவதாகவும், இன்று காலை சுமார் 10.30 மணியளவில் செயற்பொறியாளர், கிண்டி அவர்களது அலுவலகம் சென்னை கே.கே நகரில் உள்ளதாகவும் மாதாந்திர குறைதீர்ப்பு நாள் தொடர்பான கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். மற்ற உதவிப் பொறியாளர்கள் குறித்து கேட்டபோது உதவிப் பொறியாளர்கள் மூவரசம்பேட்டை மற்றும் புழுதிவாக்கம் ஆகியோரும் மேற்சொன்ன கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றிருப்பதாக தெரிவித்தார்.

5. தொடர்ந்து மேற்படி வணிக ஆய்வாளர் திரு.மோகனசுந்தரம் அவர்களின் இருக்கைக்கு பின்புறம் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் கவிதா என்றும் தான் இவ்வலுலகத்தில் கணிணி தட்டச்சராக தற்காலிகமாக பணிபுரிவதாகவும், வணிக ஆய்வாளர் திரு.மோகனசுந்தரம் அவர்கள் கொடுக்கும் பணிகளை செய்து வருவதாகவும், அதற்கு மாத சம்பளமாக ரூ.10,000/- திரு.மோகனசுந்தரம் தனக்கு கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

6. மேலும் வணிக ஆய்வாளர் திரு.D.மோகனசுந்தரம் அருகே கிழக்கு நோக்கி காணப்பட்ட மேஜையுடன் காணப்பட்ட இருக்கையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் புருஷோத்தமன் என்றும் தான் இவ்வலுவலகத்தில் (மடிப்பாக்கம் பகுதி உதவிப் பொறியாளர் அலுவலகம்) முகவராக (Foreman) கடந்த ஒன்றரை வருடங்களாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.25,870/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (ரூ.2000 x 1; ரூ.500 x 46; ரூ.200 x 1; ரூ.100 x 6; ரூ.20x1; ரூ.10x5) ஆகும். இந்த பணம் குறித்து புருஷோத்தமன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.25,870/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

7. மேலும் தொடர்ந்து வணிக ஆய்வாளர் திரு.D.மோகனசுந்தரம் அவர்களது அருகே இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தனர். அதில் முதலாவதாக நின்றுகொண்டிருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சம்பத் என்றும் தான் இவ்வலுவலகத்தில் (மூவரசம்பேட்டை பகுதி உதவிப் பொறியாளர் அலுகலகம்) கணக்கீட்டு அலுவலர் (Inspector of Assessment) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.9,730/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (ரூ.500 x 15; ரூ.200 x 9; ரூ.100 x 4; ரூ.10x3) ஆகும். இந்த பணம் குறித்து திரு.சம்பத் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.9,730/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8. மேலும் தொடர்ந்து வணிக ஆய்வாளர் திரு.D.மோகனசுந்தரம் அவர்களது அருகே நின்றுகொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் கோபி என்றும் தான் இவ்வலுவலகத்தில் (மூவரசம்பேட்டை பகுதி உதவிப் பொறியாளர் அலுவலகம்) மின் கம்பியாளர் (Wireman) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது

தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.7,470/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (ரூ.500 x 14; ரூ.200 x 1; ரூ.100 x 2; ரூ.50x1; ரூ.20x1 ) ஆகும். இந்த பணம் குறித்து கோபி அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.7,470/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

9. தொடர்ந்து உதவிப் பொறியாளர், மடிப்பாக்கம் அவர்களது அலுவலக அறையில் நின்று கொண்டிருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சித்தன் என்றும் தான் இவ்வலுவலகத்தில் (மடிப்பாக்கம் பகுதி உதவிப் பொறியாளர் அலுவலகம்) 33/11 KV SS துணை மின் நிலையத்தில் துணை மின் நிலைய இயக்குனராக (SS Operator) தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் இடதுபுற முன் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.19,320/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே (ரூ.500 x 37; ரூ.100 x 6; ரூ.50x2; ரூ.20x4; ரூ.10x4) ஆகும். இந்த பணம் குறித்து சித்தன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.19,320/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

10. மேலும் மேற்படி உதவிப் பொறியாளர், மடிப்பாக்கம் அலுவலக அறையை தொடர்ந்து வடக்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி உதவிப் பொறியாளர் மூவரசம்பேட்டை அலுவலக அறை காணப்பட்டது. அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததும் உதவிப் பொறியாளர், மூவரசம்பேட்டை மேஜையுடன் கூடிய இருக்கை கிழக்கு நோக்கி காணப்பட்டது. அவரது இருக்கைக்கு எதிரே காணப்பட்ட இருக்கையில் முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் M.மூர்த்தி என்றும் தான் உதவிப் பொறியாளர் மூவரசம்பேட்டை அலுவலகத்தில் Foreman Spl.Grade ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,000/- காணப்பட்டது. இது தொடர்பாக அவரிடம் விசாரித்தபோது இது தன்னுடைய சீட்டு பணம் செலுத்த வேண்டி தனது அண்ணன் திரு.குமார் அவர்களிடம் பெற்று வந்ததாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி திரு.குமார் அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டு அந்த பணம் ரூ.5,000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் அந்த அறையில் கிழக்கு பகுதியில் மேற்கு நோக்கி காணப்பட்ட பச்சை நிற இரும்பு அலமாரியை சோதனை செய்தபோது, அதன் இரண்டாவது அடுக்கில் இரண்டு சில்வர் நிற சிறிய அட்டை பெட்டிகள் காணப்பட்டது. அந்த இரண்டு அட்டை பெட்டிகளில் Jeyachandran Gold House என்று அச்சிடப்பட்டிருந்தது. அவற்றை திறந்து பார்த்தபோது இரண்டு சிறிய வெள்ளி டம்ளர்கள் காணப்பட்டது. இது குறித்து திரு.மூர்த்தி அவர்களிடம் கேட்டபோது, இந்த பீரோவை உதவிப் பொறியாளர் திரு.ஸ்ரீகாந்த் பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். மேற்படி இரண்டு வெள்ளி டம்ளர்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

11. இந்த கூட்டுத்தணிக்கையின்போது லஞ்சப்பணம் என்று சந்தேகிக்கப்படும் மொத்த பணம் ரூ.1,21,400/- மற்றும் இரண்டு வெள்ளி டம்ளர்கள் ஆகியவை மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது

மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி முடிக்கப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (12.01.2021) மதியம் 3.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 9.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-C.K.குமரன்,
மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், சென்னை மாவட்டம்,
சென்னை-1.

ஒப்பம்/-என்.ரவிக்குமார்,
காவல் ஆய்வாளர்,
சிறப்புப் புலனாய்வுக்குழு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-கே.எஸ்.அனிதா,
காவல் ஆய்வாளர்,
சிறப்புப் புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-அ.சமீனா பானு,
காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-D.மோகனசுந்தரம்,
வணிக ஆய்வாளர்,
உதவிப் பொறியாளர்,
(இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம் அலுவலகம்,TANGEDCO,
மடிப்பாக்கம், சென்னை-91.

ஒப்பம்/-D.புருஷோத்தமன்,
Foreman,
உதவிப் பொறியாளர்,
(இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மடிப்பாக்கம் அலுவலகம், TANGEDCO,
மடிப்பாக்கம், சென்னை-91.

ஒப்பம்/-M.சம்பத்,
Inspector of Assessment,
உதவிப் பொறியாளர்,
(இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்) மூவரசன்பேட்டை அலுவலகம், TANGEDCO,
மடிப்பாக்கம், சென்னை-91.

ஒப்பம்/-S.கோபி,
Wireman,
உதவிப் பொறியாளர்,
(இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்)
மூவரசன்பேட்டை அலுவலகம்,
TANGEDCO,
மடிப்பாக்கம், சென்னை-91.

ஒப்பம்/-P.சித்தன்,
SS Operator,
33/11 KV SS, துணை மின் நிலையம், உதவிப் பொறியாளர், (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்)
TANGEDCO, மடிப்பாக்கம்,
சென்னை-91.

ஒப்பம்/-M.மூர்த்தி
Foreman Spl.Grade,
உதவிப் பொறியாளர், (இயக்குதலும் மற்றும் பராமரித்தலும்)
மூவரசன்பேட்டை அலுவலகம், TANGEDCO,
மடிப்பாக்கம், சென்னை-91.

13/01/2021

**INSPECTOR OF POLICE**
**Special Investigation Cell**
**Vigilance & Anti Corruption,**
**Chennai - 600 016.**